[5th March 1966

ஆறுமுகனேரி இந்து உயர் தொடக்கப்பள்ளி

*183 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) ஆறுமுகனேரி இந்து உயர்தர ஆரம்பப் பாடசாலை, இந்து உயர்தர சீனியர் ஆதாரப்பள்ளியாக எப்பொழுது மாற்றப் பட்டது ?

(இ) அதன் காரணமாக ஆசிரியர்களைக் குறைக்க வேண்டு மென்று கல்வி இலாகா அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்திருப்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Standards I to V of the Hindu Higher Elementary School, Arumuganeri were ordered to be converted into Basic pattern, during 1961–62.

(b) No.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், உயர்தர ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்கும் சீனியர் பேஸிக் பள்ளிக்கூடங்களுக்கும், ஆசிரியர் கள் மாணவர்கள் விகிதாச்சாரத்தில் வித்தியாசம் ஏதாவது இருக் கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

உயர்நிலைப்பள்ளிகளிலுள்ள தமிழாசிரியர்கள்

*184 கேள்வி—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் மொத்தம் உள்ள இரண்டாம் நிலைத் (Second grade) தமிழாசிரியர்கள் பதவிகள் எத்தனை ?

(இ) அவற்றுள் பணியாற்றும் தமிழாசிரியர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) : The time and labour involved in collecting the particulars will not be commensurate with the purpose served in answering the question.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசினர் அங்கீகாரம் பெற்ற உயர்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 11 வரையுள்ள வகுப்புக் களில் தனியாக தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பித்து இருக்கிறது. அப்படியிருந்தும் பல இடங்களில் தலைமை ஆசிரியர்கள், அல்லது நிர்வாகிகள், அந்தந்தப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்காமல் இருக்கிறார்கள், இதனால் தாய்மொழிப் பயிற்சி பெறுவதற்குரிய வாய்ப்பு குறை கிறது. ஆகவே, இது குறித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ?